முருகப்பெருமான் துணை

**மகான் ஜனக்குமாரர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.11.2022**, சனிக்கிழமை

1. தலைவனே ஞானபண்டிதனே
தனிப்பெருங் கருணை வடிவாக
உலகை காக்கும் கனி வேலவனே
உன் அவதாரம் அரங்க ஞானி
2. ஞானியரின் குருவடிவாக இருக்க
நாட்டிடுவேன் அரங்கன் பெருமை கூறி
இனிமைபட அனுகூல ஆசிதனை
இயம்பிடுவேன் சுபகிருது தேள்திங்கள்
3. திங்களிலே தசதிகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 10 ம் நாள் 26.11.2022, சனிக்கிழமை)
தேசிகனுக்கு ஜனக்குமாரர் யானும்
ஓங்கார ஞான உலகம் அமைய
ஓதிடுவேன் கலியுக மக்களெல்லாம்
4. மக்களெல்லாம் பிரணவக்குடிலில்
மரணம் வெல்லும் சக்தி தரும்
சக்திமிகு ஞானியரை அனுகி
சரணாகதி அடைய வேண்டும்
5. வேண்டியே ஞான வழியாம்
வேலவன் காட்டும் சன்மார்க்க
தொண்டுமிக்க தரும வழியையும்
தொடர்ந்தேற்று வருதல் காண
6. காணவே மனமாற்றம் தெளிவு
கருணை வடிவாகியே தேறி
ஞானபலம் குருவருள் வடிவில்
நம்பிக்கைபட கண்டு சிறப்பர்
7. சிறப்புடன் சித்தி ஞானமருளும்
செப்பிடுவேன் ஞான பூசையும்
மறுப்பிலா நித்ய வழிபாடாக
மக்களெல்லாம் செய்து வர
8. வருகவே நிலைமைகள் யாவும்
வளர்ச்சித்தரும் வண்ணமுமாக
முருகப் பெருமான் அருட்தயவுபட
முன்னேற்றம் சகலவகையும் காண்கும்
9. காண்கவே அரங்கன் வேதம்
கட்டாயக் கொள்கையாக ஏற்று
ஆன்மீகமாகத் தொடரும் மக்களுக்கு
அன்னவர்களோடு அவரவர் குடிக்கும்

10. குடிக்கும் பாதுகாப்புக் கூடி
குடும்ப நலம் சகல வளமுடன்
நாடிவரும் ஞானக்குடியாக மாற்றம்
ஞானிகள் ஆசிபெற்ற வண்ணம் தேறி

11. தேறியே ஞான ஆட்சிதனை
தேசிகனால் உலகம் அடையும்
அறிவித்த ஜனக்குமாரர் என்வாக்கை
அனைவரும் ஏற்றுவர அனுகூலமாகும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–